**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.243/2022**

பிரதிவாதி சாட்சி 1 சிவசங்கரன் த/பெ.ஆனந்தன்

17.06.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.தீ.சுகந்தமாலா, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

பிரதிவாதி சாட்சி 1 சிவசங்கரன் அனுமதியின்பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

வாதி கஸ்தூரி என் இளைய மகள். 2ம் பிரதவாதி கனகவள்ளி என் மூத்த மகள். 3ம் பிரதிவாதி என் மகன். எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் எனக்கு தமிழ் தான் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள எதிருரையும் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலமும் ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான். என் தந்தை வழி தாத்தா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. என் அப்பாவுடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் எனக்கு தெரியாது. சாமிகண்ணு என்பவர் என் அப்பாவுடன் பிறந்தவரா என்றால் தெரியாது. சாமிகண்ணு திருமணம் ஆகாமல் குழந்தைகள் தத்து எடுக்காமல் இறந்துவிட்டார் என்பது தெரியுமா என்றால் அவர் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்று கேள்விபட்டேன். இந்த வழக்கில் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்துபார்த்தேனா என்றால் அது என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். என் பூர்வீக ஊர் எது என்றால் புதுவை மாநிலம் கீழூர். கீழூர் கிராமத்தில் பொதுகுடும்ப வீடு இன்னும் உள்ளது என்றால் என் வீடு உள்ளது, பக்கத்தில் என் தம்பி வீடு உள்ளது. பொதுகுடும்ப வீட்டில் பாகம் கேட்டு என் மகள் கஸ்தூரி புதுவை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 நான் பழனி என்பவருக்கு 13.09.2010 தேதியில் எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரம் என்றால் ஆமாம். அந்த பத்திரத்தை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம். நான்

தேவையில்லாமல் எந்த ஆவணத்திலும் கையொப்பம் போடமாட்டேன் என்றால் ஆமாம். மேற்படி பொது அதிகார பத்திரத்தில் சொத்து விவரத்தில் வரிசை எண்.1ல் தானம்மாள் நிலத்திற்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வரிசை எண்.2ல் ஆனந்தபடையாட்சி நிலத்திற்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். என் அம்மா பெயர் தனம்மாள். அதே பத்திரத்தில் வரிசை எண்.3ல் தனம்மாள் நிலத்திற்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். என் அப்பாவிற்கு 4 மகன்கள் மற்றும் 4 மகள்கள். மகன்கள் பெயர் பாவாடை (எ) அண்ணாமலை, சிவசங்கரன், ரங்கநாதன் மற்றும் ராமானுஜம். மகள்கள் பெயர் நீலாவதி, அஞ்சலாட்சி, பன்னீர்செல்வம் (எ) தில்லைநாயகி மற்றும் அலமேலு. வா.சா.ஆ.3 அதிகார பத்திரத்தில் சொத்து விவரம் வரிசை எண்.4ல் ஆனந்தபடையாட்சி நிலத்திற்கு தெற்கு என்று உள்ளது என்றால் ஆமாம். வரிசை எண்.5ல் பாவாடை, சிவசங்கரன் இவர்கள் பாக நிலங்களுக்கு வடக்கு என்று உள்ளது என்றால் ஆமாம். பொதுஅதிகார பத்திரப்படி அதில் உள்ள சொத்துக்களின் 4 பக்கங்களும் எங்கள் குடும்ப சொத்துக்கள் தான் உள்ளது என்றால் ஆமாம்.

(வாதி தரப்பில் வேண்டுகோளின் பேரில் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

(3ம் பிரதிவாதி ஆஜர் அவர் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது)

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.